# ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகள் - முதலாளிகள் மற்றும் சிறு வர்த்தகங்களுக்கான ‘பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு’ குறித்த தகவல்கள்

# (COVID-19 vaccines – Work health and safety information for employers and small business)

## தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்ளுதலும் WHS கடமைகளும்

**(Vaccination and WHS duties)**

‘பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு’ குறித்த முன்மாதிரி சட்டங்க(model laws)ளின் கீழ் உங்களது தொழிலாளர்களுடைய, உங்களுடைய மற்றும் வேலைத்தலத்திலுள்ள மற்ற எவரது பாதுகாப்பையும் நியாயமான அளவிற்கு நடைமுறைக்கேற்ற வகையில் நீங்கள் உறுதிப்படுத்தியாக வேண்டியது அவசியம். வேலைத்தலத்தில் தொழிலாளர்கள் ‘கோவிட்-19’-ஐ எதிர்கொள்ளும் ஆபத்தினை அறவே ஒழிக்க உங்களால் இயலாமல் இருக்கலாம். இருப்பினும், இந்த ஆபத்தினை குறைந்தபட்சமாக்குவதற்காக உங்களால் நியாயமாக இயலும் அனைத்தையும் நீங்கள் கட்டாயம் செய்யவேண்டும்.

வேலைத்தலத்திலுள்ள ஆபத்துகளைக் குறைக்க, நீங்கள் கட்டாயமாக:

- ஆபத்து மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ளவேண்டும்
- உடல்ரீதி விலகல், நல்ல சுகாதாரப் பழக்கங்கள் மற்றும் தவறாத சுத்திகரிப்புகள் - மற்றும் கிடைக்கக்கூடிய தடுப்பூசி மருந்துகள் எதனையும் உள்ளடக்கும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும், அவை ஆபத்துகளைக் கட்டுப்படுத்த எவ்வாறு உதவும் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்
- ‘கோவிட்-19’ மற்றும் தடுப்பூசி மருந்துகளை உள்ளடக்கிய கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பற்றி தொழிலாளர்களுடனும், ‘சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரதிநிதி’களுடனும் கலந்தாலோசிக்க வேண்டும்
- உங்களுடைய வேலைத்தலத்தில் அமல்படுத்துவதற்கு நியாயமான அளவிற்கு நடைமுறைக்குகந்த நடவடிக்கைகள் யாவை என்பதைத் தீர்மானிக்க வேண்டும்

## என்னுடைய 'பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு' கடமைகளைப் பூர்த்தி செய்யக் கட்டாயத் தடுப்பூசி மருந்தளிப்பினை ஒரு கட்டுப்பாட்டு நடவடிக்கையாக நான் உள்ளடக்கவேண்டுமா?

'பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு' சட்டங்களின் கீழ் தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதை ஒரு தேவைப்பாடாக அமல்படுத்துவது நியாயமான அளவிற்கு நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கும் என்பதற்கான சாத்தியம் இல்லை.

தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ளுமாறு உங்களுடைய தொழிலாளர்களை நீங்கள் வேண்ட வேண்டுமா என்பது உங்களுடைய ஆபத்து மதிப்பீட்டினை நீங்கள் மேற்கொள்ளும்போது நிலவும் சூழல்களைப் பொறுத்து அமையும். தடுப்பூசி மருந்தினை உங்களுடைய தொழிலாளர்களுக்குத் தேவைப்படுத்துவதை நீங்கள் கருத்தில் கொண்டால், அறிவுரை நாடுங்கள் மற்றும் உங்களுடைய வேலைத்தலத் தொடர்புறவுகள், பாகுபாடு மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புப் பிரச்சினைகள் ஆகியவற்றைப் பற்றி யோசியுங்கள்.

சில தொழில்கள் அல்லது தொழிலாளர்களுக்குத் தடுப்பூசி மருந்தினைத் தேவைப்படுத்தும் 'பொது சுகாதார உத்தரவுகள்' (public health orders) இருக்கக்கூடும். உங்களுடைய சுகாதார முகமையினது நடப்பு-நாள் வரைக்குமான அறிவுரைகள் என்ன என்பதை அவ்வப்போது தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள்.

## என்னுடைய வேலைத்தலத்திற்குள் நுழைவதற்கு முன்பாக அவர்களுக்குத் தடுப்பூசி மருந்து இடப்பட்டுள்ளது என்று நிரூபிக்குமாறு வாடிக்கையாளர்களை நான் வேண்டலாமா?

தடுப்பூசி மருந்து இட்டுக்கொண்டதற்கான சான்றைக் காண்பிக்குமாறு வாடிக்கையாளர்களையும், வருகையாளர்களையும் கேட்குமாறு 'பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு'ச் சட்டங்கள் உங்களை வேண்டுவதற்கான சாத்தியம் இல்லை. அந்தரங்கப் பாதுகாப்பு மற்றும் பாகுபாடு குறித்த பிரச்சினைகள் இருக்கக் கூடுமாதலால், இப்படிப்பட்ட தேவைப்பாட்டினை நீங்கள் அமல்படுத்துவதற்கு முன்பாக அறிவுரை நாடுங்கள்.

## இன்னொரு தொழிலாளர் தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக என்னுடைய தொழிலாளர்களால் தொழில் புரிய மறுக்க இயலுமா?

உடனடியாகவோ, விரைவிலோ நிகழவிருக்கும் அபாயம் ஒன்றை எதிர்கொள்ளும் நிலை இருப்பதால் சுகாதாரம் அல்லது பாதுகாப்பிற்கு பாரதூரமான ஆபத்து ஏற்படலாம் என்ற நியாயமான கரிசனம் இருந்தால், சட்டங்களின் கீழ் தொழிலாளர் ஒருவரால் வேலையை நிறுத்த அல்லது வேலையைச் செய்ய மறுக்க இயலும்.

பெரும்பான்மையான தருணங்களில், இன்னொரு தொழிலாளர் தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்ளவில்லை என்ற காரணத்தினால் மட்டுமே வேலையை நிறுத்துவதற்கு 'பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு' சட்டங்களின் மீது ஒருவரால் சார்ந்திருக்க இயலாது.

### என்னுடைய தொழிலாளர்களைத் தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்ளுமாறு நான் செய்யவில்லை என்றால், மற்றும் அவர்களில் ஒருவருக்குக் 'கோவிட்-19' ஏற்பட்டுவிட்டால், 'பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு' சட்டங்களின் கீழ் அதற்கான பொறுப்பு என் மீது சுமத்தப்படுமா?

தொழிலாளர்களைத் தடுப்பு மருந்து இட்டுக்கொள்ளுமாறு தேவைப்படுத்தாமல் இருக்கிறீர்கள் என்ற காரணத்திற்காக மட்டுமே நீங்கள் 'பணியிட சுகாதாரம் மற்றும் பதுகாப்பு' குறித்த முன்மாதிரி சட்டங்களை மீறியிருக்கிறீர்கள் என்பதற்கான சாத்தியம் இல்லை.

தொழிலாளர்களுக்குத் தடுப்பூசி மருந்துகள் இடப்பட்டிருந்தாலும், உடல்ரீதி விலகல், நல்ல சுகாதாரப் பழக்கங்கள், தவறாத சுத்திகரிப்புகள் மற்றும் பராமரிப்பு போன்ற நியாயமான அளவிற்கு நடைமுறைக்கேற்ற அனைத்துக் கட்டுப்பாடு நடவடிக்கைகளையும் உங்களுடைய வேலைத்தலத்தில் நீங்கள் கட்டாயம் தொடர்ந்து நடைமுறைப்படுத்திவர வேண்டும்.

## மேலதிகத் தகவல்கள்

- சுகாதாரம் மற்றும் தடுப்பூசி மருந்துகள் குறித்த தகவல்கள் - 'சுகாதார திணைக்களம்' (Health and vaccines information - Department of Health)
- 'பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு - 'ஆஸ்திரேலியப் பணிப் பாதுகாப்பு' (Work health and safety - Safe Work Australia)
- பணியிட உரிமைகள் - 'பணியிட நியாய அரச-குறைகேட்பாளர்' (Workplace rights - Fair Work Ombudsman)